
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.




இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk



# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 15

★ அவர்கள் நடுவிலிருந்து பிரிந்து வாருங்கள்
★ வழியைத் தவறவிட்டீர்களா ? சிறிய தியானம்
★ வெற்றிக்கான 21 ஆலோசனைகள்
★ பிரச்சனையே இல்லாமல் செய் !
★ சூனேமியப் பெண்
★ ஒரு புதுயுகம் பிறக்கும் போதுள்ள வேதனைகள்

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info

வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# அவர்கள் நடுவிலிருந்து பிரிந்து வாருங்கள்

**(2. கொரிந்தியர் 6)**

*"ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் (கிரேக்கு - தொய்நோனியா) ஏது ? ஆனபடியினால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."* (2. கொரிந்தியர் 6:14-17).



இந்த வேத பகுதியில் அநீதியான வாழ்க்கையைக் குறித்துத் தெளிவாக பேசப்படுகிறது உலகப்பிரகாரமான நோக்கங்களிலிருந்தும் வாழ்க்கை முறையிலிருந்தும் விசுவாசிகள் நிச்சயமாக தடைசெய்யப்படுகின்றனர். ஏனெனில் அவ்விதமான பிணைப்பு "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் இணைவதாகும்."

தேவனோடுள்ள ஐக்கியம் நம் ஜீவியத்தின் எல்லா பகுதிகளிலும் பரவும் ஒரு வாழ்க்கை வழியாகும். அது நம்மை நம் பரமபிதாவின் குடும்பத்திலும், அவர் பிரசன்னத்திலும் எப்பொழுதும் வாழும் ஒரு முழுமையான வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல அழைக்கின்றது.

1. "அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (வசனம் 14) நுகத்தில் இணைவதற்கு இரண்டு நபர்கள் தேவை, மேலும் அவர்களுக்கு தாங்கள் செல்லும் திசையில் போக ஒருமனம் தேவை. *மத்தேயு 11:28-29.* நம்மைக் கிறிஸ்துவின் நுகத்துடன் பிணையும்படி கட்டளையிடுகிறது. அதே நேரத்தில் நாம் வேறு எந்த ஒரு நுகத்துடனும் பிணைந்துக்கொள்ள முடியாது.

   "ஒரு முழுமையான வாழ்க்கை முறைக்கு கிறிஸ்து நம்மை அழைக்கிறார். அது நிறைவான ஒன்று - இரண்டு விதமான வழிகளைக் குறித்து கிறிஸ்து பேசியபோது, அவர் குறிப்பிட்டது இருவழிகளை மாத்திரமே, அதற்கு மேல் அல்ல இதைத்தெளிவாக உணர்ந்துக்கொள்ள தவறும்போது மனிதர் இருவழிகளிலும் நடக்க முயற்சிசெய்து மூன்றாவது வழியைக் காண்கின்றனர். கிறிஸ்தவ வாழ்க்கைமுறை நடைபெற விரும்பினால், விசுவாசி எல்லா சமயங்களிலும் தன் எஜமானனின் முன் உதாரணத்திற்கு ஒத்தவாறு நடக்க முயற்சிக்கவேண்டும். ஒன்றாக இணைந்து வேலையை நிறைவேற்றுவதைக் குறித்த ஆழ்ந்த சிந்தை மாத்திரம் தூண்டுதலாக வேண்டும். கிறிஸ்துவுக்குள்

வாழ்வதினால் வரும் மேன்மையான காரணங்களை உணர்ந்துக் கொள்ளாவிட்டால், கிறிஸ்துவின் நுகம் புண்படுத்தும். மேலும் அவ்விதமான ஒழுக்கங்கள் வெறுப்பாகத் தோன்றும்" (ஐபிட் 220).

2. *"நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது ?"* (வசனம் 14). "தோழமை" அல்லது "சகவாசம்" என்னும் இவ்வார்த்தையை மிகப்பொருத்தமாக மொழி பெயர்த்தால் 'கூட்டாளியாய் இருத்தல்' எனலாம். அதாவது ஏதேனும் ஒன்றில் ஒன்றாக பங்கெடுத்தல். நீதி எதை விளக்குகின்றது என்றால் தேவன் மனிதருக்கு அளிக்கும் இரட்சிப்பிற்கான தரமாகும். அது கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்க்கைக்கு மாதிரியாகும். இவ்விதமான வாழ்க்கைக்கும் இதற்கு நேர் எதிரான அநீதியான - சட்டதிட்டங்கள் இல்லாத - வாழ்க்கைக்கும் இடையே எவ்விதமான ஐக்கியமும் இருக்கவே முடியாது.

3. *"ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது ?"* (வசனம் 14) 'ஐக்கியம்' என்னும் வார்த்தையை 'தொடர்பு' அல்லது 'தோழமை' (கொய்னோனியா) என்ற சாதாரணமான வார்த்தையாகும். இருளுக்கும் வெளிச்சத்துக்கும் இடையே தொடர்பு இருக்கும் என்று நினைக்கவே இயலாது. ஏனெனில் அவை இரண்டும் ஒன்றின் பக்கத்தில் ஒன்று இருக்கவே முடியாது. ஒளியோடு ஐக்கியப்பட்டவர்கள் என்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்கள் பொய் சொல்லுகிறவர்கள் ஆவர். (1. யோவான் 1:5-7) சரியான நம்பிக்கைகள் தேவைதான். ஆனால் வெளிச்சத்துடன் நமக்குள்ள ஐக்கியம் புதிய வாழ்க்கையினால் உண்டான செயல்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் (1.யோவான் 2:29; 3:7, யோவான் 3:19-21; 8:39; 10:37). இருளில் நடப்பதென்று வேதம் விளக்குவது தவறான மார்க்கபேதங்களைப் பற்றிக்கொண்டு இருப்பது அல்ல, ஆனால் சகோதரனைப் பகைப்பது ஆகும் (1. யோவான் 2:11).

4. *"கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது ?"* (வசனம் 15) இசைவு என்னும் வார்த்தை ஆங்கிலத்தில் உள்ள 'ஸ்வரங்களின் ஐக்கியம்' என்ற வார்த்தையோடு தொடர்புடையது. இவ்வார்த்தை பாடும்போது உள்ள ஒற்றுமை அல்லது வார்த்தைகளை உச்சரிப்பதில் உள்ள ஒற்றுமையை விளக்குகிறது. கிறிஸ்தவ வாழ்வின் ஸ்வரங்கள் ஏற்கனவே இயற்றப்பட்டுவிட்டது. இசைக்கும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கருவியும் அந்த ஆரம்பதிட்டத்திற்கு ஏற்றவிதமாய் கட்டுப்படுத்த படவேண்டும். இசைப்பவர்களாகிய நாமும் நம் தனிப்பட்ட தாலந்துகளின்மூலம் இயக்குபவருக்கு மேன்மைபெற்று தரவேண்டும். ஆனால் நாம் நமது சொந்த ராகத்தை இசைக்கக்கூடாது. இல்லாவிட்டால் இயற்றிமுடிப்பதில் இசைவு இல்லாமல் போகும். கிறிஸ்துவையும் பேலியாளையும் (விக்கிரகங்களையும்) பின்பற்றமுயலுவது இரண்டு பாடல்களை ஒரே நேரத்தில் பாடுவதுபோல் ஆகும். கிறிஸ்து காண்பித்த மாதிரியைப் பின்பற்றும்போது நம்வாழ்வில் எவ்வளவு சுலபமாக உண்மையான இசைவு காணப்படும்.



5. *"அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கேது ?"* (வசனம் 15): இவ்விடத்தில் எண்ணப்படுவது மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுதல் அல்லது ஒரு பகுதியை வைத்துக்கொள்வது இல்லாவிடில் ஒரு சுதந்திரத்தை பங்கு போட்டு கொள்வதைக் குறிக்கும். இது பழைய ஏற்பாட்டில் வாக்குத் தத்தஞ் செய்யப்பட்ட தேசத்தைச் சுதந்தரித்த பின்னணியில் பார்த்தால் நன்கு விளங்கும். "விசுவாசிகளும் அவிசுவாசிகளும் பகிர்ந்து கொள்ளும்" படியாக பொதுவானது ஏதும் இல்லை. தேவனால் ஆளுகை செய்யப்படாத எந்த நிகழ்ச்சியிலும் கூடுகையிலும் விசுவாசி பங்கு கொள்ளக்கூடாது. விசுவாசி தன்னுடைய சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது அவபக்தியான மனிதர்கள் எடுத்துக்கொள்ளவோ அனுமதிக்கக்கூடாது. அவன் தன் சுதந்தரத்தைப் பங்கிடவும் அதற்கான வழியைத் தேடவும் செய்யலாம். எப்பொழுது என்றால், அவிசுவாசியை விசுவாசியாக மாற்றிய பின்னர். அவன் கவனத்தோடு இருக்கவேண்டியது இந்த ஒரு வேலையில்தான். தேவன் தம் வார்த்தையில் விளக்கி இருப்பதை, கர்த்தரே நம் பங்கு, அவரே இஸ்ரவேலின் நம்பிக்கையும், புதிய எருசலேமின் ஸ்தாபகருமாயிருக்கிறார். அது அவருடைய சுதந்தரமும், அவருடைய ராஜ்யமும், அவருடைய நினைவுச் சின்னமுமாகும்." (ஐபிட் 429).

6. *"தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது ?"* (வசனம் 16) இந்த கேள்வியில் அடங்கியுள்ளது ஒன்றாக இணைப்பதின்யோசனை, சேமித்து வைப்பது அல்லது குறிப்பாக சம்மதம் தெரிவிப்பது ஆகும். "சபை தேவனுடைய ஆலயமாகும்" (1. கொரிந்தியர் 6:19). அதின் உறுப்பினர்களுடைய சம்மதமோ, நம்பிக்கைகளோ, வாஞ்சைகளோ தங்கள் சகோதரர்களோடு இருக்க வேண்டுமே தவிர விக்கிரகங்களோடே அல்ல. அவர்களைச் சூழ்ந்துள்ள அவ்விதமான விக்கிரகங்கள் ஒழுங்கற்றதோ, நூதனமானதோ, மார்க்கசம்மந்தமுள்ளதோ, இல்லாததோ எப்படியாயிருந்தாலும் சம்மந்தம் கொள்ளக்கூடாது. தற்கால விசுவாசிகளின் கடினமான சோதனைக் என்னவென்றால் இந்நாட்களில் உள்ள தேவனற்ற வாழ்க்கை வாழும் மற்றவருடன் சேர்ந்து கொள்வதும் அதினால் பெறும் திருப்தியும் ஆகும். இதற்கான ஒரே மாற்று மருந்து கிறிஸ்துவைப் பற்றிய அறிவு மாத்திரமல்லாமல் அவருடைய மாதிரியைப் பின்பற்றுவதாகும்.

*"ஆனபடியினால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள், அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்"* (வசனம் 17). பவுல் இந்த வசனத்தைப் பற்றிய உபதேசத்தில் முக்கிய படுத்துவதாவது, ஒரு கிறிஸ்தவன் அநீதியிலிருந்தும், இருளிலிருந்தும், பேலியாளிடமிருந்தும், அவிசுவாசிகளிடமிருந்தும், விக்கிரகங்களிடமிருந்தும் பிரிந்துபோய் வாழும் போதே பரிசுத்தமாக முடியும் என்ற ஒரு மன உறுதியுடன் இருக்கவேண்டும்."

# வெற்றிக்கான 21 ஆலோசனைகள்

1. நீ விரும்புகின்ற வேலையைச் செய். அதுவே உன் தாலந்திற்கும் நேரத்திற்கும் தகுந்தது.
2. பிறர் எதிர்பார்ப்பதைவிட அதிகமாகக் கொடுப்பதை மகிழ்ச்சியோடு செய்.
3. உறுதியான உற்சாகமான நபராக மாறு.
4. எப்பொழுதும் உன்னையும் மற்றவர்களையும் மன்னித்துக்கொண்டே இரு.
5. உதார குணமுடையவனாய் இரு.
6. நன்றி உள்ள இருதயத்தோடு இரு.
7. உறுதியாயிரு, உறுதியாயிரு, உறுதியாயிரு.
8. குறைவான சம்பளத்திலும் சேமிக்கும்படி பயிற்சி செய். வரவுக்குள் செலவு செய் திருப்பித் தர இயலாத அளவிற்கு கடன் வாங்காதே.



9. நீ எப்படி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறாயோ, அப்படியே நீ சந்திக்கும் ஒவ்வொருவரையும் நடத்து.
10. தொடர்ந்து முன்னேற அர்ப்பணித்துக் கொள்.
11. நல்ல தரத்தை (குணத்தை) அடைய அர்ப்பணம் செய்.
12. மகிழ்ச்சியின் அடிப்படை செல்வம், அதிகாரம், கௌரவத்தில் அல்ல, நீ நேசித்து, மதிக்கின்றவர்களுடன் உள்ள உறவில்தான் உண்டு.
13. உண்மையாக இரு.
14. நேர்மையோடு இரு.
15. எப்பொழுதும் முயற்சி செய்வதில் முதல்வராக இரு.
16. சிலசமயங்களில் தவறுகள் நிகழ்வதுபோல இருந்தாலும், எப்பொழுதும் முடிவு எடுப்பவராக இரு.
17. மற்றவர்களைக் குற்றப்படுத்துவதை நிறுத்து. உன் வாழ்க்கையில் எல்லா பகுதிக்கும் நீயே பொறுப்பெடு.





## பிரச்சனையே இல்லாமல் செய்!

வாத்தின் அலகைப் போல் 'வாய் கொண்ட பிளாட்டிபஸ்' நமக்கு வாத்தை நினைவுபடுத்தும். வாத்தைப் போலவே இதற்கும் சவ்வாலான விரல்களும் இணைக்கப்பட்ட பாதங்களும் உண்டு. ஆனால் அதன் வால் நீர்நாயிடம் இரவல் வாங்கியது போல் இருக்கிறதே! அது மட்டுமல்ல. வாத்து போன்ற இந்த விலங்கு தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்கிறது. பாலூட்டிகளைப் போலவே இதற்கும் தோலின் மேல் மயிர் உள்ளது. ஆனால் இது முட்டையிட்டு அதினின்று குஞ்சு (குட்டி) வெளி வருகிறது. அதன் தாடைகளில் உணவை சேர்த்து வைக்கப்பைகள் உள்ளன. அதன் பின்னங்கால்களில் விஷத்தன்மையுள்ள முள் உண்டு. அது பாம்பின் பல்போல செயல்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக பிளாட்டிப்பஸ், ஒலி எழுப்பும் எதிரொலி கேட்கும் விலங்கு அல்லது டால்பினைப் போல பொருளின் இடத்தைத் தெரிந்து கொள்கிறது. இது எந்த பரிணாம வளர்ச்சியில் வந்தது என யாருக்கும் தெரியாது.

ஆகவே இங்கு பிரச்சினை ஏது? படைப்பு தான். வாத்தையும், நீர்நாயையும், பாலூட்டியையும், ஊர்வனவற்றையும், மீன் போன்ற டால்பின்களையும் வடிவமைத்தவர், எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, பிளாட்டிபஸ்ஸில் வைத்தார். எப்படியோ தற்செயலாக இவ்வுயிரினம் வந்தது எனப் பரிணாமக் கொள்கையினர் கூறுவாராயின் அது சரியாகாது, எப்போதும்போல, அவிசுவாசி முக்கிய கருத்தை விட்டுவிடுவான். ஆனால் தெளிவாயிருக்கும் காரியத்தை அவன் எப்படிக் காணாமல் இருக்கமுடியும்? வாத்தையும், நீர்நாயையும், பாம்பையும், டால்பினையும் படைத்தவர் பிளாட்டிபஸைப் படைத்தார் என விசுவாசிக்க வேண்டியதாகிறது!

# சூனேமியப் பெண்

## உயிர்த்தெழுதலைக் குறித்துக் கேள்விப்படுதல்

ஒருநாள், தேவனுடைய நன்மைகளைத் திரளாய் அனுபவித்து வந்த குடும்பத்தில் துக்க நிகழ்ச்சி நேர்ந்தது. இஸ்ரவேலில் உண்மையுள்ள இந்த குடும்பத்திற்கு வந்த துன்பம் மற்றும் மகிழ்ச்சி நம்மெல்லாருக்கும் இன்று ஒரு நல்ல பாடமாக அமைந்துள்ளது.

முதலில் அந்தப் பெண் தேவனுடைய மனுஷனுக்குக் காட்டின மரியாதைக்குத் தக்கதான ஈவாக, பிள்ளையில்லாதிருந்த அவளுடைய துக்கத்தின்போது அவள் விசுவாசத்தின் பாடத்தைக் கற்பதுடன், மற்றொரு முக்கிய பாடமும் கற்க வேண்டியதிருந்தது. இமைப்பொழுதில் அவளுடைய சந்தோஷம் துக்கமாக மாறியது. ஆனால் அதுவே கர்த்தருடைய மட்டற்ற இரக்கத்தினாலும் நன்மையினாலும் பெருகி உயிர்மீட்சி பெற்றது. உயிர்த்தெழுதலின் வல்லமை வாழ்வின் சகல துக்கத்தையும் நிர்மூலமாக்கும் என்பதை அவளுக்கு உணர்த்திக் காட்டும்படி அது நடந்தேறியது. நடந்த சம்பவம் என்ன என்று காண்போம்.



**துக்கம் (2. ராஜாக்கள் 4ம் ஆதிகாரம்)**

நாட்கள் கடந்துச் செல்ல, குழந்தை சிறுபையனாக வளர்ந்தான். தனது தகப்பனுடன் சேர்ந்து அறுவடை நிலத்தில் வேலை செய்கிறவர்கள் நடுவில் அங்குமிங்கும் ஓடித்திரிந்து, அறுவடையில் பங்கெடுப்பது அந்தச் சிறுவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.



ஆனால் கோடைக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தில் வெயில் கொளுத்துவது வழக்கம். அதிலும் சூனேம் பள்ளத்தாக்கில் பிற இடங்களைக் காட்டிலும் உஷ்ணம் அதிகமாக இருக்கும். ஒரு பயணி, "அறுவடை காலத்தில் அப்பிரதேசத்தின் உஷ்ணம் செங்கற்சூளையின் தகன உஷ்ணம் போலிருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளான். ஒருவனுடைய தலை மூடாமலிருந்தால் அவனுக்கு ஆதவலக்குவான் அடிக்கும் வாய்ப்பு உண்டு. சிறுவர் அதனால் பாதிக்கப்பட்டால் உயிர்ச்சேதமும் ஏற்படலாம்.

ஒருநாள் அந்தச் சிறுவன் வயல்வெளியில் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தபோது, சடிதியாகத் தன் தகப்பனிடம் ஓடிச் சென்று, "என் தலை, என் தலை" என்று கதறினான்.

தன்னுடைய மகன் எவ்வளவு மோசமான காய்ச்சலால் அவதிப்படுகிறான் என்று அவனுடைய தகப்பனார் அப்போது உணரவில்லை. தனது வேலைக்காரரில் ஒருவனை அழைத்து, தன்னுடைய மகனை ஏந்தி, அவன் தாயிடம் ஒப்படைக்கும்படி கூறினான். வீட்டில் தன்னால் இயன்ற சகல முயற்சிகளையும் தாய் மேற்கொண்டும் பலனில்லாமல் போயிற்று. மத்தியானத்தில் அவள் மடியில் அவன் இறந்துப் போனான்.

அவனுடைய தாய் இதுகுறித்து மிகுந்த சஞ்சலம் அடைந்தாலும் தன்னுடைய விசுவாசத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அவள் தனது உபத்திரவத்தின் நடுவில் ஒருவர் மாத்திரம் உதவி செய்வார் என்று நம்பினாள். அவர்தான் கர்த்தராகிய யெகோவா இரக்கத்திலும் அன்பிலும் ஐசுவரிய சம்பன்னரான தேவன். சாரிபாத் ஊராளாகிய விதவைப் பெண்ணின் மகனை எலியா தீர்க்கதரிசி உயிரோடெழுப்பினதை சூனேமியப் பெண் நிச்சயமாகக் கேள்விப் பட்டிருந்திருப்பாள்(1.ராஜக்கள்17:22). அவள் தனது தேவையின் நடுவில் எலிசாவின் உதவியை நாடும்படி தீர்மானமாக இருந்தாள். தனது மகனை எடுத்து, கர்த்தருடைய ஊழியக்காரனுக்கென்று தான் புதிதாகக் கட்டிவைத்து கொடுத்த மேல்வீட்டறையில் அவனைக் கிடத்தினாள். பின்பு கர்த்தருடைய தீர்க்கதரிசியிடம் பயணம் செல்ல ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அவள் கணவனுக்கு, தனது மனைவி எலிசாவிடம் செல்ல விரும்புவதைக் கேள்விபட ஆள் அனுப்பினாலும் தன்னுடைய மகன் இறந்துப் போனதை அவன் அறிந்திருக்கவில்லை. தன்னுடைய மனைவி எலிசாவைத் தேடக் காரணம் என்ன என்பதை அறிய வாஞ்சித்தான். அவன் அவளிடம், "ஏன் நீ அவரைத் தேடுகிறாய்? இன்று அமாவாசியும் அல்ல, ஓய்வு நாளும் அல்லவே" என்று கேட்டனுப்பினான்.

ஆனால் அவள் இன்ன காரணத்திற்காகத் தான் தீர்க்கதரிசியிடம் செல்கிறாள் என்பதைத் தன் கணவனிடம் அறிவிக்கவில்லை. அவள் அவனைத் தொந்தரவு செய்யலாகாது என்று ஒருவேளை எண்ணியிருக்கலாம். மேலும்

அவள் போகவேண்டியதற்குப் பதிலாக அவளை வீட்டில் உட்காரவைத்துவிட்டு அவன் தானே போகவேண்டும் என்று கட்டாயம் பண்ணுவதை அவள் தடுத்து நிறுத்திக் கொண்டாள்.

அவள் கழுதையின்மேல் ஏறி அமர்ந்துக் கொண்டாள். கழுதையை ஓட்டவும் வழிகாட்டவும் ஒரு வேலைக்காரனை கூடவே நடக்கச் செய்தாள். மிகவும் அவசரமாகக் கழுதையை ஓட்டச் சொன்னாள். சுமார் 12மைல்கள் தூரமாக, சூனேமிலிருந்து எலிசா தங்கியிருந்த கர்மேல் வரைக்கும் போய்ச் சேர்ந்தாள்.

### உதவிக்காக எலிசாவிடம்

கர்மேலின் சிகரத்திலிருந்து, அந்தப் பெண் பள்ளத்தாக்கு வழியாகக் கிட்டிச்சேர்வதை எலிசா கண்டான். அவன் தன் வேலைக்காரனாகிய கேயாசியிடம், "அதோ சூனேமியாள் வருகிறாள். நீ அவளை எதிர்கொண்டு ஓடி, உனக்கு என்ன வேண்டும் என்று கேள். அவளிடம், 'நீ சுகமா? உன் கணவர் சுகமா? உன் பிள்ளை சுகமா என்று விசாரி" என்று சொல்லியனுப்பினான்.

ஆனால் அந்த ஸ்திரீ தன் கணவனுக்கு தெரிவிப்பதைக் காட்டிலும், கேயாசியிடம் தெரிவிப்பதை அற்பமாய் எண்ணிய காரணத்தினால் கேயாசியிடம் "சுகம்தான் " என்று பதிலளித்தாள். அவள் மனதில் விசாரம் நிறைந்திருந்தாள், தீர்க்கதரிசியைத் தவிர்த்து, வேறு யாரிடமும் அதைப் பகிர்ந்துக்கொள்ள விரும்பவில்லை. மலையின் ஓரத்தில் அவன் நின்றுகொண்டிருக்க, அவள் அவனை நெருங்கி வந்தவுடனே, அவளுடைய விசாரம் பொங்கி, முழுவதுமாக வெளிப்பட்டது. தனது துன்பத்தை வெளிப்படுத்தும் விதமாக, ஆச்சரியத்தில் மூழ்கியிருந்த தீர்க்கதரிசியின் முன் தரையில் குனிந்து அவனுடைய காலைப் பிடித்துக்கொண்டாள்.

இது கேயாசிக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனதில் ஆழத்தில் சிறிதளவுகூட இரக்கம் என்பது இருக்கவில்லை. அந்தப் பெண்ணின் சஞ்சலத்தைப் புரியாதவன் போல, தேவனுடைய மனுஷனின் உதவியாளன் என்ற போர்வையில் கேயாசி அவளைத் தள்ளிவிட எத்தனித்தான்.எலிசா அந்தச் செயலைத் தடுத்து நிறுத்தினான். எலிசா, "அவளைத் தடுக்காதே. அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. அதைக் கர்த்தர் ஏதோ ஒரு காரணத்துக்காக எனக்கு அறிவியாமல், மறைத்து வைத்தார்" என்று கண்டித்தான்.

அப்பொழுது அவள் எலிசாவைப் பார்த்து இகழ்ச்சியாக, "நான் என் ஆண்டவனிடம் ஒரு குழந்தை வேண்டும் என்று கேட்டதுண்டா? எனக்கு அபத்தம் சொல்லவேண்டாம் என்று நான் சொல்லவில்லையா?" என்றாள்.

அவள் பேசின இந்த வார்த்தைகள் அவளுடைய சஞ்சலத்தை எலிசாவிடம் அறிவிக்கப் போதுமானதாக இருந்தது. அவளுடைய மகன் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறான் என்பதை எலிசா உடனே புரிந்துகொண்டான். உடனடியாக



ஏதாவது செய்தாக வேண்டும். அவன் கேயாசியிடம், "உன் அரையைக் கட்டிக்கொண்டு, என்னுடைய ஊன்றுகோலை எடுத்து, போய், அந்த சிறுவனின் முகத்தின்மேல் வை," என்றான். மேலும், "அதிசீக்கிரம் கடந்துப்போ, வழியில் யாரைச் சந்தித்தாலும் அவர்களை வாழ்த்தவோ, பேசவோ நிற்கவேண்டாம். யார் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லவும் வேண்டாம். சீக்கிரம் சென்று வா" என்றான்.

கேயாசி கருணை ஊழியத்துக் கென்று வேகமாய்ப் புறப்பட்டான். ஆனால் சிறுவனின் தாயார் அவனோடு செல்ல மறுத்துவிட்டாள். கேயாசியிடம் வல்லமை இல்லை என்பதை அவள் ஒருவேளை உணர்ந்திருக்கலாம். "நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்"(வச.30) என்று அவள் தீர்க்கதரிசியிடம் தீர்மானமாகச் சொல்ல, அவனும் எழுந்திருந்து அவள் பின்னே போனான்.

### மரணத்திலிருந்து ஜீவன்

அதற்குள் கேயாசி சூனேமுக்கு முன்பதாக விரைந்தான். தீர்க்கதரிசிக்கென்று கட்டப்பட்டிருந்த அறைக்குள் பிரவேசித்து, எலிசாவின் கோலை இறந்த பிள்ளையின் முகத்தில் வைத்தான். அது குளிர்ந்து உறைந்து போயிருந்தது. ஒரு அசைவும் காணவில்லை. கேயாசி நேரத்தை வீணடிக்காமல், எலிசாவையும் பிள்ளையின் தாயையும் சந்தித்து தனது ஊழியத்தில் கண்ட தோல்வி குறித்துச் சொல்லும்படி திரும்பிச் சென்றான்.

அதன் பின்பு, குழப்பமடைந்திருந்த தீர்க்கதரிசி உள்ளே நுழைந்தபோது, இறந்து போயிருந்த பாலகனின் முகத்தை உற்று நோக்கினான். அந்தப் பாலகன் இவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகிறதாய் இருந்திருந்தால் ஏன் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று வியந்திருக்கலாம். இப்படிப்பட்ட இழப்பைச் சந்தித்து சஞ்சலமான முடிவை அநுபவிப்பதைக் காட்டிலும் குழந்தை பாக்கியத்தில் வருகிற சந்தோஷத்தை அநுபவியாமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்!

எலிசா, தன்னில் வல்லமை இல்லை என்பதை உணர்ந்தவனாக, பரத்திலிருந்து வரும் உன்னத பலனுக்காக வேண்டுதல் செய்தான்.

பின்பு அவன் போய் பிள்ளையின் மேல் படுத்தான். அவன் சரீர முயற்சி எடுத்தால் கர்த்தர் அதை ஆதரித்து அதனால் ஏதாவது செய்யக்கூடும் என்று நினைத்தான். அவனுடைய சரீரத்தின் உஷ்ணம் விரைத்துப் போயிருந்த சிறுவனின் சரீரத்தில் சூடுபிடித்து ஏறினது. தீர்க்கதரிசி தனது வாயைச் சிறுவனின் வாயில் வைத்து, அவனுக்குள் சுவாசக் காற்றை ஊதுகிறதின் மூலம் செயற்கைமுறை சுவாசம் ஏற்படுத்தி, தனக்குக் கீழ் கிடத்தியிருந்த சிறுவனுக்கு மூச்சு கொண்டு வர முயற்சி செய்தான். அதேசமயம் கர்த்தர் தனக்கு உதவிசெய்யும்படியாக ஜெபித்தான்.



இந்த முயற்சியில் திரும்ப ஈடுபட்டதினால் எலிசா சரீரப்பிரகாரமாகக் களைத்துப்போனான். எலிசாவின் சரீர உஷ்ணமானது விறைத்துப்போன சிறுவனின் உடலுக்குள் பாய்ந்தபடியால், எலிசாவின் சரீரத்தில் உஷ்ணம் குறைந்து அவன் சரீரம் விறைக்க ஆரம்பித்தது. அதனால் அவன் இறங்கி, அறைக்குள் அங்கும் இங்குமாக நடமாடி, குளிர்ந்துபோன தனது சரீரத்துக்கு உஷ்ணம் வரவழைத்தான், இரத்த ஓட்டமும் சூடுபிடித்தது. இயற்கையான சரீர உஷ்ணம் திரும்ப வந்தது. அவன் மறுபடியும் சிறுவனின்மேல் முன்புபோல படுத்தான்.

அவன் இவ்வாறு செய்து கொண்டிருந்தபோது, அந்த அற்புதம் நடந்தது. சடுதியாக தனக்குக் கீழ் கிடத்தியிருந்த சிறுவனின் சரீரம் நெகிழ ஆரம்பிப்பதை உணர்தான். பிள்ளை சரீரத்தை உலுக்கிக்கொண்டு, தும்ம ஆரம்பித்தான்; அவனுடைய நுரையீரல் சுவாசமுச்சுவிட ஆரம்பித்தது. கடைசியாக, அவன் தன் கண்களைத் திறந்து, எழுந்து அமர்ந்தான்.

**கர்த்தர் அவனுக்கு மரணத்திலிருந்து ஜீவன் தந்துவிட்டார்.**

முன்னால் சஞ்சலம் நிறைந்திருந்த வீட்டில் இப்போது சந்தோஷம் பெருகி ஓடினது. கர்த்தருடைய பெரிய அன்பின் ரூபாகாரத்தை அந்தப் பெண் கண்டு, எவ்வளவு நன்றியுள்ள இருதயத்தோடு அவரிடம் திரும்பியிருக்கும்!

ஆனால் இந்த நற்செய்தியை முதலாவதாக அவளிடம் தெரிவித்தாக வேண்டும். எனவே எலிசா கேயாசியிடம், “அந்த சூனேமியாளை அழைத்துக் கொண்டுவா” என்று சொல்லியனுப்பினான்.

அவள் ஆச்சரியத்தோடும் பயத்தோடும் வாசலில் வந்து நின்றாள். தீர்க்கதரிசி அவன் படுக்கையருகே நின்றிருப்பதைக் கண்டாள். அவன் இரக்கத்துடனே அவளைப் பார்த்து, “உன் குமாரனை எடுத்துக்கொண்டு போ” என்றான்.

அவளுடைய பாலகன் பிழைத்துவிட்டான்! அவளுக்கிருந்த குழப்பம் நீங்கிற்று. அந்தப் பெண்ணுக்கு அது அளவு மீறினதாக இருந்தது. மரணத்தினால்



ஏற்பட்ட பயங்கர மன உளைச்சலினிமித்தமும் அவள் கடந்துவந்த வேதனையான அனுபவங்களினிமித்தமும் அடைந்திருந்த களைப்பினால், முன்பு தீர்க்கதரிசியின் முன்னால் தரையில் தாழவிழுந்தாள். இப்போது, உயிர்த்தெழுதலின் அற்புதத்தினால் தெம்படைந்தவளாக, வணக்கத்தின் அறிகுறியாக முழங்காலில் முகங்குப்புற வணங்கி, பின்பு அன்பாகத் தனது பாலகனை இரு கரங்களை நீட்டிப் பெற்றுக்கொண்டாள். பின்பு அவனைத் தனது படுக்கையில் படுத்துக்கொள்ள அழைத்துச் சென்றாள்.

**தேவன் ஏன் இந்த துக்கத்தை அனுமதித்தார்?**

நாம் இந்த அற்புதத்தின் கதையைப் படிக்கையில், மகிழ்ச்சியின் அலையினால் பொங்கி வழிகிறோம்; துக்கம் வந்தாலும், அதன்பின்பு மகிழ்ச்சி அலை பெருக்கெடுத்து வருகிறது. ஆனால் இவைகளெல்லாம் அனாவசியமல்லவா? தேவன் உயிர்கொடுக்க நினைத்திருக்கும்போது ஏன் அந்தப் பாலகன் மரிக்க வேண்டும்? ஏன் அந்த இளம்பெண் அந்தவிதமாக மனதில் சஞ்சலப்படுமளவுக்கு வருத்தப்பட வேண்டும்? இவ்வாறுதான் தேவனுடைய அற்புத வல்லமையைக் காட்டவேண்டுமா?

ஆனால் இவைகளைவிட அதிகமான காரியங்கள் இந்த சம்பவத்தில் அடங்கியுள்ளது. உண்மையில் எவ்வளவுக்கெவ்வளவு நாம் வேதத்தை வாசிக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு, கடவுள் எதையுமே தேவையில்லாமல் செய்வதில்லை என்பதை நாமறிய உதவும். அவையனைத்திலும் அர்த்தமும் நோக்கமும் இருக்கும்.

இரண்டு பெண்களைப் பற்றின கதை 2.ராஜாக்களின் 4ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது; ஒன்று விதவை பற்றியும், மற்றொன்று ஒரு குடும்பப் பெண்மணியைப் பற்றியும் உள்ளது. ஒருத்தியின் இரண்டு ஆண்பிள்ளைகளும் அடிமைகளாக விற்கப்படக்கூடிய இக்கட்டிலும், மற்றொருத்தி குழந்தை செல்வம் அற்ற குடும்பவாழ்வு நடத்துகிற நிலையிலும் இருந்தனர்.

முன்பு குறிப்பிட்ட விதவையின் வாழ்க்கையில் நடந்த அற்புதம், ஒரு வழியாக, இயல்பான இஸ்ரவேலரை மீட்பதன் கதையைச் சுட்டிக்காட்டினது. விதவையான பெண்மணியைப் பவுல் ஆகாருக்கு ஒப்பிட்டு, நியாயப்பிரமாணத்துக்கு அடிமையான இஸ்ரவேலருக்கு உதாரணமாகப் பேசினான் (கலாத்தியர்4:24).

அதைப்போலவே, சூனேமியாளைச் சாராளுக்கு ஒப்பிடலாம். பவுல் அவளை பற்றி கலாத்தியர் 4:23-ல் பேசுகிறான். அவள் உண்மையான இஸ்ரவேலருக்கு உவமையாக இருக்கிறாள். இந்த உண்மை இஸ்ரவேலர் யாரெனில், ஆபிரகாமின் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கிற அனைத்து யூதர்களையும் யூதரல்லாத புறஜாதிகளையும் உள்ளடக்கும்.

சாராள் ஈசாக்கின் பிறப்பின்போது எவ்வாறு மகிழ்ந்தாளோ அவ்வாறே

இவளும் தனக்குக் குமாரன் பிறந்தபோது அகமகிழ்ந்தாள். அதைப்போலவே சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து பிறந்தபோது யூதேயாவில் மகிழ்ச்சி உண்டானது. அவர் “தேவனால் அடிக்கப்பட்டு” இறந்தார், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்தது போல, அந்தப் பெண்ணுக்கு மிகுந்த வேதனையையும், தீர்க்கதரிசியின் மனதில் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. ஏனெனில் ஆரம்பத்தில் யாருக்குமே அதன் காரணம் புரியவில்லை.

பாலகனின் உயிர்த்தெழுதல் எல்லோருக்கும் விடைகொடுத்தது. எனினும் கர்த்தருடைய அன்பின் குணாதிசயத்தை முழுவதுமாக அறியவும், வேறு எந்த வகையிலும் கிடைக்கமுடியாத மிகுந்த மகிழ்ச்சியை அநுபவிக்கவும் அது வழிசெய்தது.

நாம் கர்த்தரில், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் நம்பிக்கை வைத்தால் அந்தப் பெண் பெற்ற பேரானந்தம் போலவே நாமும் பெறமுடியும்.

இந்தப் பெண்ணைப் பற்றின மேலும் சில தகவல்களை 2.ராஜாக்கள் 8-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். இஸ்ரவேல் தேசத்தில் உண்டான பஞ்சத்தினிமித்தம் அவள் புறஜாதிகளின் தேசத்தில் (பெலிஸ்தியர்–அலைகிறவர்கள்) அலைந்து திரிந்தாள். அந்தப் பஞ்சம் நீடித்த நாட்களும், நேபுகாத்நேச்சார் பதவி விட்டு நீங்கி அலைந்து வந்த நாட்களும் (தானியேல் 4:32) நிகரானவை. அந்தநாட்கள் நிறைவேறினபின்பு அவள் தன் காணியாட்சியான நிலத்தை ராஜாவின் நேரடி கட்டளையின்பேரில் திரும்பப் பெற்றாள்.

அது இஸ்ரவேலைப் பொறுத்த மட்டில் உண்மையானது. அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றினாலும், ஆவிக்குரிய பஞ்சத்தினிமித்தம் தேவனுடைய வீட்டைவிட்டு புறஜாதிகளின் நாட்டில் அலைந்து திரிகிறார்கள். அந்த பஞ்சத்தின் நாட்கள் நிறைவேறும்போது (இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்) அவர்கள் ராஜாவுக்கு முன் நிறுத்தப்பட்டு, தங்கள் காணியாட்சியைத் திரும்பப் பெறுவார்கள்.

இவ்வாறு தேவனுடைய மனுஷனாகிய எலிசா சூனேமியாளுக்கு உதவிசெய்து, அவள் உபகாரத்துக்குப் பதில்செய்தான். அது கர்த்தர் இயேசு சொன்ன வார்த்தையின்படி உண்மையாகிறது. “தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்” (மத்தேயு 10:41). நாமும் அவ்வாறே நமது எஜமானின் ஊழியத்தில் பங்கெடுக்கும் தேவ ஊழியர்களைக் கனம் பண்ணுவோம். அவர்களுக்கு உதவிசெய்வது நமது கடமையாகும்.



# ஒரு புதுயுகம் பிறக்கும் போதுள்ள வேதனைகள்



ஒரு குழந்தையின் பிறப்பு, குடும்ப வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அதிலும் சிறப்பாக ஒரு புது ஜீவன் வர இருக்குமானால் அந்த ‘மகத்தான நாளை’ ஆர்வமுடன் எதிர்நோக்கி நாட்களைக் கழித்த வண்ணம் எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

எனினும் அந்நாளில் (அல்லது இரவில்) தாயின் கரங்களில் அக்குழந்தை வைக்கப்படும் வேளை வருவதற்கு முன்வரை குறையாத வேதனையும் நிம்மதியற்ற மணிநேரங்களும் அங்கே நிலவும்.

இயேசு பூமிக்குத் திரும்பி வந்து சமாதானமும் செழிப்பும் மிகுந்த உலகளாவிய ஒரு அரசை நிலைநாட்டுவதாக அவர் வாக்களித்துள்ளார். அவர் வருகை சமீபமாக இருக்கும்போது அதற்கான தெளிவான அறிகுறிகள் இருக்கும் என்று அவர் நமக்குச் சொல்கிறார். இந்த உலகத்தின் ஒரு புதிய பிறப்பை பறை சாற்றும் அடையாளங்களானது (கடுமை குறையாததாகவும்) இரக்கமற்றதாகவும் வருத்தமூட்டுவதாகவும் இருக்கும் என்று அவர் நமக்கு உரைக்கின்றார். ஆகவே விழிப்போடு காத்துக்கொண்டு ஆயத்தப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் நமக்குச் சொல்கிறார்.

## உலகளாவிய உபத்திரவங்கள்

*லூக்கா 21*ஆம் அதிகாரத்தில் இயேசுவின் வார்த்தைகள் மிகத் தெளிவாக உள்ளது. அவரது இரண்டாம் வருகை மற்றும் இந்த உலகத்தின் முடிவு பற்றிய அடையாளங்களைக் குறித்து அவரிடம் கேட்டபோது முதலாவதாக நிகழ வேண்டிய அநேக காரியங்களைக் குறித்து அவர் பேசினார். “*அப்பொழுது அவர் அவர்களை*

*நோக்கி : ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பல இடங்களில் மகா பூமிஅதிர்ச்சிகளும் உண்டாகும், வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்" (21:10,11).*

நாம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை செய்தித்தாள்களின் தலையங்கங்களும், தொலைக்காட்சியின் செய்திகளும், கதைகளும் ஒவ்வொரு நாளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

**பூமி அதிர்ச்சி :** இதைக் கண்காணிக்கும் தொழில் நுட்ப கருவிகளானது இத்தகைய அதிர்ச்சி மேலும் மேலும் அதிகரித்த வண்ணம் இருக்கும் என்றும், அனுதினமும் அழுத்தங்களுக்கும் மிக அதிகமான நெருக்கங்களுக்கும் இப்பூமி உட்பட்டிருக்கிறது என்றும் காட்டுகின்றது. தவறான கோடுகள் பூகோளம் எங்கும் எப்பொழுதும் நகர்ந்த வண்ணம் உள்ளன.

ஆசியாவில் ஏற்பட்ட சுனாமியில் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை கால் மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. பயங்கரமான இழப்புகளை குடும்பங்கள் அனுபவித்திருக்கிறது. சொத்தும், பிழைப்பூட்டும் தொழிலும் சுக்கு நூறாக உடைக்கப்பட்டிருக்கிறது. பழைய நிலைக்கு மீண்டும் வருவதற்கு வருடங்களாகும். மற்றும் பல மில்லியன்களும் செலவாகும்

**பஞ்சம் :** ஆப்பிரிக்காகண்ட மெங்கும் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் ஆகாரத்திற்காகவும், குடிநீருக்காகவும் கையேந்தி நிற்கும் அநுதின காட்சிகளை இப்பஞ்சம் ஏற்படுத்திவிட்டது. உதவிகரம் நீட்டும் தொண்டு நிறுவனங்கள் கடும் முயற்சி எடுத்துவருகின்றன. அதோடு பண உதவியின் அளவை அதிகரிக்க தொடர்ந்து வேண்டுகின்றன.

**எய்ட்ஸ் :** இது உலகமெங்கும் காணப்படும் பிரச்சினை மிக்க நோயாக இருக்கின்றது. அநுதினமும் ஆயிரக்கணக்கில் இறந்து கொண்டிருக்கின்றார்கள். இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள் அநேகருக்கு சொற்ப ஆயுள்தான். இதற்குப் பொருத்தமான பரிகாரம் என்ன என்று கண்டுகொள்ளவும் ஏற்ற உதவி அளிக்கவும், இவ்வியாதியினை மேற்கொள்வதற்கு ஆவன செய்யும்படி அரசுகளை வேண்டிக்கொள்ளவும் மருத்துவர்களும் அறிவியல் அறிஞர்களும் அவர்களது அனைத்து ஆற்றலினையும் மூலதனங்களையும் ஈடுபடுத்தி வருகின்றனர்.

**யுத்தம் :** இது செய்தித்தாளில் அநுதினம் நிரந்தர இடம் பெற்ற ஒரு பகுதியாக இருக்கிறது. சண்டையானது அடுத்து எந்த நாடுகளுக்கு இடையேயும், நாடுகளுக்கு உள்ளேயும் வெடிக்கப்போகிறது என்று முன்னறிவிக்க முடியாத



நிலை இருக்கிறது. குறிப்பிடப்பட்ட ரீதியில் மத்திய கிழக்கிலுள்ள இஸ்ரவேலைச் சூழ்ந்துள்ள நாடுகள் பிரச்சினைகளால் சூழ்ந்துள்ளது.

இந்த உலகத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளானது, இயேசு, ராஜாவாக வரப்போவதை முக்கிய அம்சமாக காட்டிக் கொண்டிருக்கின்றன. அவருடைய வருகை/ இருக்கும் வரை எருசலேமானது அநேக நாடுகளிலுள்ள யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் என்று தொடர்ச்சியாய் இயேசு கூறினார்.

*"பூமியின் மேல் மிகுந்த இடுக்கணும் இந்த ஜனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும். பட்டயக் கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக்கா21:23,24)*

இப்பொழுது திரும்பிவந்த யூதர்கள் எருசலேமில் காணப்படுகின்றனர் புதுயுகம் வரும் - அதாவது பூமியில் தேவராஜ்யம் நிலைநாட்டப்படும் - என்பதை முன்னறிவிக்கும் இறுதி நிகழ்ச்சிக்கான சாட்சிகள் ஆயத்தமாக்கப்பட்டு விட்டன.

## பிறப்பின் வேதனைகள்

இக்காரியங்கள் அனைத்தும் நிச்சயமாக துயரமூட்டுபவைகளாக இருந்தாலும், இப்பொழுது நம் அருகில் இருக்கிறவைகளைப் பார்க்கிலும் மிகச் சிறந்த ஒன்றை சுட்டிக் காட்டுபவைகளாக இருக்கின்றன. லுக்கா 21ஆம் அதிகாரத்தில் விளக்கப்பட்டிருப்பதற்கு இணையாக, இப்பொழுது நமது உலகில் சூழ்ந்துள்ள அனைத்து பிரச்சினைகளைக் குறித்தும் இயேசு இவ்வாறு கூறியுள்ளார்.

*"இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.. முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" (மத்தேயு 24:8-14).*

என்ன செய்ய வேண்டுமென்று அறிய ஆவல்கொண்ட அனைவருக்கும் அவரது ஆலோசனை என்னவென்றால் : *"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற படியினால் விழித்திருங்கள்" (24:42).*

உலக நிகழ்ச்சிகளை நாம் உற்று நோக்க வேண்டும். தேவராஜ்யத்தின் வருகையின் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும். ராஜ்யத்தின் நற்செய்தியைப் புரிந்து கொண்டு ராஜாவைச் சந்திக்க நம்மையே ஆயத்தப்படுத்தவேண்டும்!

- பீட்டர் எட்வர்ட்ஸ்